திருவள்ளுவர் ஆண்டு 1979 மார்கழி 11 | வீச்சு 18
சென்னை, 25—12—48

குடந்தைக் களத்தில் அறப்போர்!

உரிமைக்காகப் போராடும் உத்தமர்களைத் தடிகொண்டு தாக்குகின்றனர் ஆணவ ஆட்சியினர்!

உள்ளம் உருக்கும் சம்பவங்கள்!

திராவிடர் கழக நிர்வாகக் கமிட் பின் தீர்மானப்படி, குடந்தை ல் பொதுக்கூட்டமோ ஊர் லமோ எதுவும் நடத்தக்கூடாது ன்னும் சர்க்காரின் சர்வாதிகார த்தரவை எதிர்த்து, 19-12-48 ாயிறு முதல் குடந்தை மக்கள் ஞ்சாத நெஞ்சுடன் அறப்போர் ற்றிவருகின்றனர்.

நாள்தோறும் காலை 9 மணிக்கு டையுத்தரவை எதிர்த்து பத்து ாண்டர்கள் இந்தி எதிர்ப்பு ஒலி ள முழக்கியவண்ணம் அமைதி ன முறையில் குடந்தைத் தெருக் ா் வழியே ஊர்வலமாகச் செல் ர்கள். பல்லாயிரக்கணக்கான ாதுமக்கள் உள்ளக் கருத்தை ரைக்கும் உரிமையையும் பறிக் ் ஊராள்வோரின் உலுத்தத் ்த்தை எதிர்க்கும் அறிகுறி க தொண்டர்கள் பின்னே ள்திரளாகக் கடலெனத் ண்டு செல்கின்றனர். அமைதி ன முறையில் அறப்போர் ாத்திவரும் தொண்டர்களையும் வர் பின்னே தொடர்ந்துவரும் ் திராவிடரையும் ஒவ்வொரு ளும் தடிகொண்டு தாக்கி மிரு தனமான முறையில் மனித ட்டை ஆடிவருகின்றனர் ாலீசார். திங்களன்று சில ாண்டர்கள் பலத்த அடிபட்டு மென மண்ணில் சாய்ந்து ந்தனர். சிலர் உடலிலிருந்து செங்குருதி கொட்டிற்று குடந்தை மண்ணில். குடவாசல் தோழர் சீனிவாசன் மண்டை அடிபட்டு இரத்தம் சிந்தி செத்த பிணமெனத் தரையில் சாய்ந்தார். இருவர் ஆஸ்பத்திரியில் உள்ளனர். உரிமைக்காகப் போராடும் உத்தமர்களுக்கா இந்தக் கதி என்பதை எண்ணி எண்ணி குடந்தை நகரமே கண்ணீர் உகுக்கிறது.

• தலைவர் பெரியார் அவர்கள் போராட்டம் தொடங்குவதற்கு முன்னாள் இரவு காரணமின்றி திடுமெனக் கைது செய்யப்பட்டு, பல கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டு திங்கள் மாலை விடுதலை செய்யப்பட்டார்.

(9-ம் பக்கம் பார்க்க)

திராவிடர் கழகத்தில் சிக்குண்டு காற்றில் பறக்கிறது சர்க்காரின் 144 தடை உத்தரவு!

சௌத்ரியிலிருந்து மிஸ்ரா!

★

ஒரு பயணம்

★

சௌத்ரி ஒரு ஸ்டேஷன்! **மிஸ்ரா** மற்றொரு ஸ்டேஷன்!

ஏராளமான காங்கிரஸ்காரர்கள் இன்னமும் சௌத்ரி ஸ்டேஷனில்தான் "வெயிட்டிங் ரூமில்" காத்துக் கொண்டிருக்கின்றனர் ஆனால் சிலர்—அந்த "சிலர்" மெள்ள மெள்ள "பலர்" ஆகிக்கொண்டிருக்கின்றனர்—மிஸ்ரா ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்துவிட்டனர்.

சௌத்ரிக்கும் **மிஸ்ரா**வுக்கும் இடையே ஏராளமான "ஸ்டேஷன்கள்" இருக்கின்றன! அங்கங்கே பல காங்கிரஸ்காரர்கள் காத்துக் கொண்டிருக்கின்றனர், சிலர் அடுத்த ஸ்டேஷனுக்குப் போக, சிலர் அதற்கடுத்த நிலையம் போக! சிலர் அதற்கப்புறம் உள்ள நிலையங்களில் தத்தமக்கு ஏற்ற இடம் போக! சிலர் மிஸ்ராவுக்கே போகவும் 'மிகச் சிலர்' அதைத் தாண்டிப்போகவும் தயாராகவே உள்ளனர்!

சௌத்ரிக்கும் **மிஸ்ரா**வுக்கும் நடுவே உள்ள ஸ்டேஷன்களில் ஒன்று சங்கர்ராவ் தேவ்! மற்றொன்று ஜ்வாலா பிரசாத்! இன்னொன்று கே. பி. திருப்பதி! வேறொன்று டாக்டர் கே சுப்பாராவ்!

இந்த வெவ்வேறு ஸ்டேஷன்களில் நிலையாகத் தங்கிவிட்ட காங்கிரஸ்காரர்கள் ஒரு சிலர்தான்! மற்ற பெரும்பாலோர் ஒரு ஸ்டேஷனிலிருந்து மற்றொரு ஸ்டேஷனுக்குப் பயணம் செய்தவண்ணம் உள்ளனர். **சௌத்ரியிலிருந்து சங்கர் ராவ் தேவ்! சங்கர் ராவ் தேவிலிருந்து ஜ்வாலா பிரசாத்! ஜ்வாலா பிரசாத்திலிருந்து கே. பி. திருப்பதி! கே. பி. திருப்பதியிலிருந்து டாக்டர் கே. சுப்பாராவ்! டாக்டர் சுப்பாராவிலிருந்து மிஸ்ரா!** இப்படி சௌத்ரியிலிருந்து தொடங்கி மிஸ்ரா வரையில் பயணம் செய்தவண்ணம் உள்ளனர் காங்கிரஸ்காரர்கள்.

சௌத்ரி, காங்கிரஸ் இயக்கத்தின் இன்றைய போக்கிலே துளியளவும் வெறுப்புக் கொள்ளாத சுத்த சுயம்பிரகாசங்கள் நிறைந்துள்ள இடம்! மிஸ்ரா, காங்கிரஸ் இயக்கத்தின் நடைமுறையிலே மட்டுமல்ல, காங்கிரஸ் மந்திரிமார்களின் நடத்தையிலேகூட அதுவும் டில்லி சர்க்காரில் கொலு வீற்றிருக்கும் மகத்தான தேசியத் தலைவர்களின் நோக்கிலும் போக்கிலும் கூட சந்தேகம் கொண்டுள்ள சஞ்சலவாதிகளின் ஸ்டேஷன்! சௌத்ரியிலிருப்பவர்கள், இன்னமும் காங்கிரஸ் தூய்மையின் இருப்பிடம், தியாகத்தின் உறைவிடம், அஞ்சாமையின் நிலையம் என்று இன்பக் கனவு கண்டு கொண்டிருப்பவர்கள். ஆனால் மிஸ்ராவில் இருப்பவர்களோ காங்கிரஸ் மந்திரிமார்களின் சந்தேகத்திற்குள்ளான சரிந்துபோன நடத்தையை அச்சமற்ற தயை தாட்சண்ணியமின்றி கண்டித்துத் தீரவேண்டும் என்ற திட்டமான முடிவுக்கு வந்துவிட்டவர்கள்!

சௌத்ரிவாசிகள் சூதுவாது அற்றவர்கள், உலகம் அறியாதவர்கள், தங்கள் கண்ணை இறுக மூடிக்கொண்டால் உலகமே இருண்டு போய்விடும் என்று தவறாக எண்ணிக்கொண்டிருப்பவர்கள். "காங்கிரசின் போக்கு அப்பு அழுக்கு அற்றதாகவே இருக்கிறது, காங்கிரஸ் மந்திரிமார்களின் நடத்தை சொட்டுசொல்லமுடியாத சிறப்பினதாகவே உள்ளது, எங்கும் எத்தகைய மாற்றமும் ஏற்பட்டுவிடவில்லை, இந்திய தேசீய காங்கிரஸ் இன்றும் கூட உரிமைக்காகப் போராடும் உத்தமப் பணியையே மேற்கொண்டிருக்கிறது, குறைசொல்லவோ குற்றம் கூறவோ தவறுகளைக் காட்டவோ தேவைப்படும் அளவு எத்தகைய சிறு பிழையும் செய்யவில்லை காங்கிரஸ்" என்று அவர்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள்—இன்னமும்! ஜெய்பூர் காங்கிரஸ் நடைபெறும் இந்தக் காலத்திலும்! முன்னெல்லாம் சிங்கமெனக் குரல் எழுப்பிய சர்தார் படேல்கள் இந்நாளில் சிறுநரியென ஊளையிட்டுக்கொண்டு முதலாளிமார்களின் முதுகைச் சொரிந்து கொடுத்துக் கொண்டிருக்கும் இந்த நாளிலும்!

ஆனால் **மிஸ்ராவாசிகளோ** அத்தகையினர் அல்லர், இப்போதெல்லாம் காங்கிரஸ் முன்போல் இல்லை, மக்கள் முன்னேற்றத்தில் அது அக்கறை செலுத்துவதில்லை, பாட்டாளிகளின் நன்மைக்கான நாட்டமோ அதற்குக் கொஞ்சமும் இல்லை, வேட்டையாடற்குரிய விலங்குகள் என மக்களை எண்ணிக் கிடக்கும் காட்டு ராஜாக்களின் தர்பாரிலிருந்து விடுபட விழைந்து பொறுப்பாட்சி கோரும் மக்களுக்கு விடுதலைபுரி இருக்கும் திக்கினைச் சுட்டிக் காட்டவும் தயங்குகிறது காங்கிரஸ், ஆதிக்கவாதிகளிடமும் அதிகார மோகம் படைத்தவர்களிடமும் சிக்கிக் கொண்டு, காங்கிரஸ், எடுப்பார் கைப்பிள்ளையாக, மேலிடத்தாரின் விளையாட்டுப் பொம்மையாக மாறிக் கொண்டிருக்கிறது, பாசிசப் பாதையில் அடிமேல் அடிவைத்து வேகமாக நடந்துகொண்டிருக்கிறது என்னும் இவ்வளவு உண்மைகளையும் முற்றிலும் இல்லாவிட்டாலும் ஓரளவுக்கேனும் தெளிவாக உணர்ந்துகொண்டிருப்பவர்களே **மிஸ்ராவாசிகள்!**

எல்லா காங்கிரஸ்காரர்களுமே விரைவில் மிஸ்ராபுரிக்கு வந்துவிட முடியவில்லை, பலராலே சௌத்ரி நகரைவிட்டு அகலவே முடியவில்லை, காரணம் பாசம் அவர்களை சௌத்ரி நகரோடு சேர்த்துப் பிணைக்கிறது. சௌத்ரியிலிருந்து மிஸ்ரா—ஒரு பயணம்! அந்தப் பயணத்தை எல்லா காங்கிரஸ்காரர்களாலும் மேற்கொள்ள முடியவில்லை எப்படி முடியும்? எல்லோருக்குமேவா உண்மை நிலைமையை உள்ளது உள்ளபடி உணரும் ஆற்றலும், உணர்ந்ததை ஊராள்வோருக்கு அஞ்சாமல் எடுத்துக் கூறும் ஆண்மையும் இருக்கமுடியும்?

முதன் முதல் தங்கள் கட்சியிலே கட்சிக் கொள்கைக்கு நேர் மாறான போக்கு தென்பட்டால் சிலரால் அதை நம்பவே முடியாது. ஒன்றுமில்லை! இதெல்லாம் ஏதோ ஒரு வகை கனவு! நாளடைவில் சரிப்பட்டுவிடும் என்று எண்ணி அந்

அளவிலே திருப்தியடைந்து விடுவர்! சிலருக்கு அப்போதே உள்ளம் சஞ்சல புரியாக மாறிவிடும், சலிப்பு தோன்றும், குறைகளை எடுத்து வெளியே . கொட்டிவிட வேண்டும் என்ற ஆத்திரம் தோன்றும். இவ்வளவு நல்ல இயக்கத்தை இப்படிப் பாழாக்குகிறார்களே தூர்த்தர்கள் என்ற ஆவேசம் பிறக்கும்! ஆனால் பலர் இத்தகு மனப் போராட்டங்கள் ஏதும் கொள்ளார், குறைகளைக் கண்டவிடத்து, ஏது குறை, எப்படிவந்தது என்று சிந்தித்தும் பாரார், குறைகள் நிறைந்த விடத்தும் குறைகளே இல்லை எனத் தாமாக பொய்க் கனவு கண்டுவிட்டு, பூரிப்படைந்து விடுவர்—வழக்கம்போல! அவர்கள் சௌத்ரிவாசிகள், அங்கேயே தங்கிவிட்டவர்கள்! அவர்கள் கிடக்கட்டும், அவர்களைப் பற்றி நமக்குக் கவலை இல்லை, சிந்திக்கத் தெரியாத சிறியோர்கள் அன்னார், ஆனால் உள்ளத்தில் சஞ்சலம் கொள்கிறார்களே சிலர் குறைகளைக் கண்டவிடத்து, அவர்கள்தான் நமக்கு முக்கியர், அவர்களாலேதான் ஒரு கட்சி தூய்மை அடையமுடியும். கட்சி மட்டுமல்ல நாடே முன்னேற்றபுரி நோக்கி முன்னேற முடியும். அவர்கள்தான் ஒரு நாட்டின் உண்மைச் சொத்து; சிந்தனைச் செல்வம்! அவர்கள் உள்ளத்திலே தோன்றும் சஞ்சலம் பிறகு சந்தேகமாக மாறும்! சந்தேகம் ஐயவினை எழுப்பும்! ஐயவினா தக்க பதிலைப் பெறாவிட்டால் அவர்கள் கட்சியை விட்டே வெளியேறவும் தயங்குவதில்லை! கட்சி என்பது நாடும், நாட்டில் உள்ள மக்களும், மக்களின் வாழ்க்கையும் முன்னேறுவதற்காக அறிஞர் சிலர் ஆய்ந்து வகுக்கும் ஒரு அமைப்பே தவிர கட்சிகள் வாழ்வதற்காக அல்ல ஒரு நாடு இருப்பது! இந்த உண்மையை உணர்ந்தவர்களே மிஸ்ராவாசிகளாக மாறுகிறார்கள்; மற்றவர்கள் சௌத்ரிகளாகவே தான் இருப்பார்கள்! நாட்டுக்குத் தேவை மிஸ்ராக்கள்; சௌத்ரிகள் அல்ல! சிந்திக்கத் தெரிந்தவர்கள்; சிந்திக்க மறுப்பவர்கள் அல்ல!

ஜெய்ப்பூரிலே சென்ற கிழமை நடைபெற்றதல்லவா 50 லட்சரூபா செலவில் மகத்தானதோர் காங்கிரஸ் மாநாடு, அந்த மாநாட்டில் காங்கிரஸ்காரர்களின் ஒழுக்கக் கேட்டைப்பற்றி ஓர் தீர்மானம் நிறைவேறியிருக்கிறது! அந்தத் தீர்மானம் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் கொண்டு வரப்பட்டதிலிருந்து கடைசியாக அது மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது வரையுள்ள நிகழ்ச்சிகள் மிகவும் ருசிகரமானதோர் மனப் பண்பு விளக்கம்!

சங்கர் ராவ் தேவ், அகில இந்திய காங்கிரசின் பொதுச் செயலாளர்! அவருக்கே சஞ்சலம் ஏற்பட்டுவிட்டது காங்கிரஸ்காரர்களின் நடத்தையைப் பற்றி! ஆகவே அவர் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார் அ. இ. கா. கமிட்டியில் காங்கிரஸ்காரர்கள் இனி ஒழுக்கமாக நடந்துகொள்ள வேண்டுமென்று! அந்தத் தீர்மானம் நிறைவேறியும்விட்டது காங்கிரஸ் மாநாட்டில்! எப்படி இருக்கிறது காங்கிரசின் அழகு! காங்கிரஸ்காரர்களின் நடத்தை சரியில்லை என்று காங்கிரஸ் காரியதரிசியே காங்கிரஸ் மாநாட்டில் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறார்! அதை காங்கிரஸ்காரர்களே ஒப்புக்கொண்டு 'ஓட்'டும் கொடுத்துள்ளனர்! இரண்டு லட்சம் பேர் இந்தியத் துணைக் கண்டம் முழுவதுமிருந்து ஓடோடி வந்தார்கள் காங்கிரஸ் மாநாட்டிற்கு என்று தேசியத் தாள்கள் தாங்க முடியாத பூரிப்போடு புகல்கின்றன! வெட்கம் இருக்கவேண்டாமா அந்த ஏடுகளுக்கு இரண்டு இலட்சம் பேர் எதிரிலே காங்கிரஸ்காரர்களின் ஒழுக்கம் அம்பலத்திற்கு இழுக்கப்பட்டதே என்பதை எண்ணி! தீர்மானத்தை முன்மொழிந்துவிட்டு சொல்கிறார் சங்கர் ராவ் தேவ், "மக்கள் உள்ளத்தில் காங்கிரசுக்கு நியாயமாக எவ்வளவு மதிப்பு இருக்கவேண்டுமோ அது இப்போது இல்லை!" மதிப்பு இல்லையாம் காங்கிரசுக்கு, மதிமிகு செயலாளர் அதை மன்றத்திலே கூறுகிறார், நம்மாலும்தானே மதிப்பு குறைந்திருக்க வேண்டும் என்ற நினைப்பே இன்றி! காங்கிரஸ்காரர்களின் ஒழுக்கம் கெட்டுவிட்டது என்று கூறும்போது நாமும் ஓர் காங்கிரஸ்காரர்தானே, நம்மையும்தானே அது குறிக்கும், என்ற சிந்தனை அவருக்கு இருந்ததாகவே தெரியவில்லை!

"ஆட்சிப் பீடத்தோடு ஏற்பட்டுள்ள தொடர்பு பல காங்கிரஸ்காரர்களைக் கெடுத்துவிட்டது! துரதிர்ஷ்டவசமாக பதவி மோகம், அதிகார ஆசை, பணம் சேர்க்கவேண்டும் என்ற எண்ணம் இவைகளே இப்போது காங்கிரஸ்காரர்களிடம் தலைதூக்கிவருகின்றன. பொதுமக்களின் நன்மைக்காக தன்னலமற்ற சேவை செய்யவேண்டும் என்ற மனப்பான்மை சிறுகச் சிறுக மறையத் தொடங்கிவிட்டது."

சங்கர் ராவ் தேவ் ஜெய்ப்பூர் காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தின் ஒரு பகுதி இது! காங்கிரஸ்காரர்களை இந்தத் தீர்மானம் எவ்வளவு அழகாகப் படம்பிடிக்கிறது பாருங்கள்!

காங்கிரஸ்காரர்கள் கெட்டுவிட்டனர்!
பதவிமோகம் கொண்டுவிட்டனர்!
அதிகார ஆசை அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது!
சுயநலவாதிகளாக மாறிவிட்டனர்!
பணம் சேர்க்கத் தொடங்கிவிட்டனர்!

ஜெய்ப்பூர் காங்கிரசில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் காங்கிரஸ்காரர்களை அர்ச்சிக்கும் அகராதி இது! இவ்வளவு காரமான மொழியில் காங்கிரஸ்காரர்களைத் தாக்க திராவிடக் கழகத்தினர் உள்ளம் ஒருபோதும் இசையாது! **பதவிமோகம் தலைக்கேறிவிட்டது! அதிகார ஆசை உள்ளத்தை உலுக்குகிறது! சுயநல சொரூபிகளாக ஆகிவிட்டனர், அகப்பட்ட பணத்தைச் சுருட்டுகின்றனர்! பொதுநல ஒழுக்கமின்றி கெட்டுவிட்டனர்!** என்னும் இந்த ஐந்து குற்றச்சாட்டுகளை காங்கிரஸ்காரர்கள்மீது சங்கர் ராவ் தேவ்—அவரும் ஒரு காங்கிரஸ்காரர்தான் — சுமத்துகிறார், அதை காங்கிரஸ்காரர்கள் ஒப்புக் கொண்டும் விட்டனர். இனியும் ஏன் இவர்களுக்கு இந்த அரசியல் வாழ்க்கை என்று கேட்கிறோம் நாம். பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பவர்கள் மீது பதவிப் பித்தர்கள், அதிகார வெறியர்கள், சுயநல பிம்பங்கள், பணம் சுருட்டிகள், ஒழுக்கம் கெட்டவர்கள் என்னும் இவ்வளவு மகத்தான குற்றங்கள் சாட்டப்பட்டு அதை அவர்களும் உண்மைதான் என ஒப்புக் கொண்டும்விட்டால், பிறகும், அவர்கள் பொது வாழ்க்கையில் உலவுவது மன்னிக்க முடியாத குற்றம் மட்டுமல்ல, மக்களுக்கு

அவர்கள் இழைக்கக் கூடிய மகத்தான துரோகம் இதைவிட வேறு இருக்கமுடியாது!

தீர்மானம் மேலும் தொடர்ந்து கூறுகிறது: "**எந்த விசேஷ சலுகைகளையோ பெர்மிட்டுகளையோ தங்களுக்கோ தங்களைச் சேர்ந்த நண்பர்கள் அல்லது உறவினர்களுக்கோ வாங்கிக் கொடுப்பதில் காங்கிரஸ்காரர்கள் ஈடுபடக்கூடாது, எல்லா காங்கிரஸ்காரர்களும், முக்கியமாக மத்திய சட்டசபை மாகாண சட்டசபை உறுப்பினர்கள் [அதாவது எம். எல். ஏ. க்கள்] இதைக் கவனித்து குற்றம் குறை எதுவும் சொல்ல இடமின்றி உதாரண புருஷர்களாக நடந்துகொள்ளவேண்டும்.**"

இனி பெர்மிட்டுகளை வாங்கித் தராதே! இனி விசேஷ சலுகைகளைக் கேட்டுப் பெருதே! இனி குற்றம் குறை எதுவும் சொல்ல இடம் கொடாதே! இனி உதாரண புருஷராக நீ இருக்கச் சிறிதும் தயங்காதே என்று தீர்மானம் கூறுகிறது! ஆகவே இதுவரை அவர்கள் பெர்மிட்டுகளை தங்களுக்கும் தங்கள் உற்ருர் உறவினர்கட்கும் தேடிக்கொண்டனர் என்பதும், விசேஷசலுகைகளை நாடி அலைந்தனர் என்பதும், குற்றம் குறை பல சொல்ல இடமிருக்கும்படியே நடந்துகொண்டனர் என்பதும், உதாரண புருஷர்களாக நடக்க மறுத்தனர் என்பதும் திட்டவட்டமாக வெளியாகிவிட்டது! இந்த உண்மைகளை நாம் எடுத்துச் சொன்ன குற்றத்திற்காகத்தான் நம் "விடுதலை" யிடமிருந்து ரூபா 2000 ஜாமீன் கேட்டுப் பெற்றனர் நம் ஆளவந்தார்கள், இதோ காங்கிரஸ் மாநாடே நாம் நெடுநாட்களாகக் கூறிவந்த குற்றச்சாட்டுகளை மெய் என ஒப்புக்கொண்டுவிட்டது, இதற்கென்ன கூறுகிருர்கள் இந்த ஓமந்தூரார்கள் என்று கேட்கிறோம் நாம்!

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் இந்தத் தீர்மானம் விவாதத்திற்கு வந்தபோது **மஹேஷ் சந்திர மிஸ்ரா** இந்தத் தீர்மானத்திற்கு ஒரு திருத்தம் கொண்டுவந்தார்! அந்தத் திருத்தமும் அந்தத் திருத்தத்திற்கு ஏற்பட்ட கதியும் நம் கவனத்தை இழுக்கக்கூடியவை. சங்கர்ராவ் தேவின் தீர்மானம் "எல்லா காங்கிரஸ்காரர்களும், குறிப்பாக மத்திய, மாகாண, சட்டசபை உறுப்பினர்கள், உயர்ந்த ஒழுக்கத்தை நிலைநாட்டி உதாரண புருஷர்களாக விளங்கவேண்டும்" என்று கட்டளை இடுகிறது. இது போதாது என்று கருதினர் **மஹேஷ் சந்திர மிஸ்ரா**. "எல்லா காங்கிரஸ்காரர்களும் குறிப்பாக மத்திய மாகாண சட்டசபை உறுப்பினர்களும்" என்பதோடு **அதிலும் குறிப்பாக மாகாண மத்திய மந்திரிகளும் உயர்ந்த ஒழுக்க நெறியைக் கடைப்பிடிக்கவேண்டும்** என்று அவர் திருத்தம் கொண்டுவந்தார். பொதுவாக காங்கிரஸ்காரர்கள் மட்டுமல்ல, சட்டசபை உறுப்பினர்கள் மட்டுமே அல்ல, மாகாண மந்திரிகளும் டில்லி மந்திரிகளும்கூட ஒழுங்காக நடந்துகொள்ளவில்லை, நாட்டு நன்மையை உள்ளத்தில் கொண்டு உயர்பணி ஆற்றவில்லை, பதவிப் பித்திலிருந்தும் அதிகார மோகத்திலிருந்தும் மீண்டவர்களாகத் தென்படவில்லை என்பதை குத்திக் காட்டும் சரியான நையாண்டி மிஸ்ராவின் திருத்தம். அந்தத் திருத்தம் 107 பேர்களால் ஆதரிக்கப்பட்டிருக்கிறது, 52 பேர்தான் அதற்கு எதிர்ப்பு. காங்கிரசின் பெயரால் நாடாள வந்திருக்கும் அமைச்சர்களிடம் வெறுப்பு கொண்டவர்கள், தேசீய எம். எல். ஏ.க்களின் தவருன நடத்தை கண்டு உள்ளம் வெதும்புபவர்கள், காங்கிரசின் இன்றைய பாசிசப் போக்கு ஆகாது—கூடாது என்பதை அழுத்தந் திருத்தமாக அறிவிக்கக்கூடிய அறிவுத் தெளிவு பெற்றவர்கள், மஹேஷ் சந்திர மிஸ்ராக்கள், அவ்வளவு அதிகமாக இருக்கிருர்கள் காங்கிரசில்! 107 பேர்களால் ஆதரிக்கப்பட்டு மந்திரிகளின் நடத்தையைச் சந்தேகிக்கும் இத் திருத்தம் நிறைவேறிவிட்டது என்பதை தலைவர் அறிவித்ததும் பிரதிநிதிகளின் பக்கத்திலிருந்து மட்டுமல்ல பொது மக்களின் காலரிகளிலிருந்தும் **பலமான கரகோஷம்** எழுந்ததாம், ஹிந்து பத்திரிகையின் சொந்த நிருபர் கூறுகிருர்!

பலமான கரகோஷம்! காங்கிரஸ்காரர்களே காங்கிரஸ் மந்திரிகளைக் கண்டிப்பதற்குக் காங்கிரஸ் மாநாட்டில் பலமான கரகோஷம்! ஆளவந்தார்களின் நடத்தை இனியேனும் ஒழுங்காக இருக்கவேண்டும் என்று கூறும் மிஸ்ராவின் திருத்தத்திற்குப் பல மான கரகோஷம்! மந்திரிகள் மக் களின் நம்பிக்கையை இழந்துவிட் டனர் என்பதை சொல்லாமற் சொல்லும் வாசகத்திற்குப் பல மான கரகோஷம்! வெட்கம் இருந் தால் ஆளவந்தார்கள் தங்கள் பதவி களை வீசியெறிய வேண்டாமா? வெளிப்படையாக இதுபோல அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் தீர்மானம் நிறைவேறிய பிறகுமா அமைச்சர்கள் அந்த வெல்வெட் நாற்காலிகளை விட்டகல மறுக்கவேண்டும்? செச்சே! இவர்களா அமைச்சர்கள் இந்த நாட்டிற்கு! வெட்கம், வெட்கம்!

* * *

அமைச்சர்களின் போக்கு ஒழுக் கக் குறைவாக இருக்கிறது என்று **மஹேஷ் சந்திர மிஸ்ரா** திருத்தத் தீர் மானம் கொண்டுவத்து நிறைவேற் றினரே இது **ரோஹிணி குமார சௌத்ரி** என்பவருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை! எதற்காக அமைச் சர்கள்மீது வீண்பழி சுமத்தவேண் டும் என்று கேட்கிருர் அவர் அமைச்சர்கள் ஏதோ அப்பழுக் கற்ற தூய்மைசேர் நடத்தை யர் என்றெண்ணிக் கொண்டு அமைச்சர்கள் மீது வீண்பழியா என்று கொதித்தெழுந்து கேட்ட தோடு அமையவில்லை ரோஹிணி குமார், எம். எல். ஏ. க்கள் மீது தான் என்ன குற்றம்—பிழை சிறி தும் புரியாத பெருந்தகைகள் அல் லவோ அவர்கள் என்று இடிமுழக் கமும் புரிகிருர்! பாவம் ரோஹிணி குமார் சௌத்ரி எந்த உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாரோ இவ்வளவு நாட்கள் இந்தப்பூலோக விஷயங்கள் அவருக்குப் புரியாத பெரும் புதிராக இருக்கிறது! ரோஹிணி குமார் சௌத்ரி, எம். எல், ஏ, க்கள் ஒழுக்கக் குறைவாக நடந்து கொள்வதாகக் குறிப்பிடும் அந்த வரியையே தீர்மானத்திலி ருந்து எடுத்துவிட வேண்டுமென்று திருத்தம் ஒன்று கொண்டு வந்தார் —ஆனல் அந்தத்திருத்தம் தோற்று விட்டது!

அங்கே அந்தத்திருத்தம் தோற்று விட்டது என்ருலுங்கூட மொத்தத் தில் காங்கிரஸ்காரர்களிற் பலர் இன்னமும் ரோஹிணி குமார் சௌத்ரிகளாகத்தான் இருக்கிருர் கள்—மஹேஷ் சந்திர மிஸ்ராக்க

(12-ம் பக்கம் பார்க்க

ஓ. எம். சுப்பிரமணியன்

அவர்கள் சிந்தும் கண்ணீர்!

தறிக்குழியிலே கால், கைகளில் நாடா, முகத்திலே பெருமூச்சு, கன்னங்களிலே வடிந்து காய்ந்து போன கண்ணீர், உள்ளத்திலோ வேதனையின் விம்மல், எதிரே, "என்னை நம்பினாயே தோழா, உனக்கு வாழ்வு ஏது?" என்று அவனைப் பார்த்து எள்ளி நகையாடுவது போலத் தாழ்ந்துகிடக்கும் கைத்தறி, அதன் பக்கத்தே நான் சுழல்வதுபோலத்தானப்பா உன் வாழ்வும் துன்பக்கேணியில் சுழல்கிறது என்பதை அவனுக்கு உணர்த்துவதற்காகவே உருவாக்கப் பட்டதுபோன்ற திரிவட்டம், அதன்முன்னே அதை ஏந்திய வண்ணம் கண்ணீரும் கம்பலையுமாக வீற்றிருக்கும் ஏந்திழை, அந்த சோக பிம்பத்தின் அருகே, சொர்ண விக்கிரகம் போல் பிறந்து வறுமை வாணலில் வதக்கப்பட்ட காரணத்தால் வறுத்த மீன்குஞ்சு போலத் தோற்றமளிக்கும் சிறு குழந்தை, குழந்தையின் வாயிலே அம்மா பசி பசி என்ற வேதனைச் சொற்கள் — அதன் கையிலோ காலித் தார்கள் இரண்டு! இந்த உள்ளம் உருக்கும் காட்சியைக் காணும் அவன் கண்கள் குளமாகின்றன, முன்னமே நனைந்து காய்ந்துபோன கன்னத்தை மேலும் நனைக்கின்றன கண்ணீர்த் துளிகள், சிறு குழந்தைபோல விம்முகிறான், பிறகு தன் செயலை எண்ணி தானே வெட்கப்படுகிறான், ஒரு ஓட்டு ஓட்டுகிறான் தறியில், மறுபடியும் கை ஓய்ந்துவிடுகிறது— வேலை செய்ய மறுக்கிறது, செய்து என்ன பலன் என்று கேட்கிறது உள்ளம், இதுதான் பலன் என்று கூறுவதுபோல கண்ணிலிருந்து இரண்டு சொட்டு நீர் கரத்திலே விழுகிறது! அவன் அந்த நீர்த் துளிகளைப் பார்க்கிறான், அதிலே அவனுடைய இருண்ட எதிர்காலம் நிழலாடுகிறது, கண்டு நடுங்குகிறான், அவன் உடல் நடுங்கும் போது அவனுடைய வாழ்க்கைப் பாதையே நடுங்குவதுபோல அவனுக்குத் தோன்றுகிறது, நீண்ட பெருமூச்சு விடுகிறான்; இந்தப் பெருமூச்சா அத்தான் நம் வாழ்க்கையின் முடிவு என்று அவனுடைய ஆசை மனைவி அவனைப் பார்த்துக் கேட்கவில்லை, ஆனால் அவள் அவனைப் பார்க்கிற பார்வை! அந்தப் பார்வைக்குப் பேச வாயுண்டானால் அதைத்தான் கேட்கும்!

தென்னாட்டில் உள்ள இலட்சக் கணக்கான நெசவாளர் குடும்பங்களிலே இன்று காணப்படும் சோக சித்திரம் இது. வறுமை அவர்களை வாட்டுகிறது. பட்டினி அவர்களைப் பார்த்துப் பரிகசிக்கிறது பரம்பரை பரம்பரையாக அவர்கள் வாழ்க்கைக்கு ஒரு வழி வகுத்துக் கொடுத்துவந்திருக்கும் அந்தத் தொழில்—ஆம், அந்த நெசவுத் தொழில் இப்போது அவர்களை வேதனை எனும் தோணியில் ஏற்றிச் சென்று பட்டினிச் சாவு எனும் பாறையில் மோதுண்டு சுக்கு நூறாகிச் சிதையும்படிச் "சித்திரவதை" செய்கிறது. அவர்கள் கண்ணீர் சிந்துகிறார்கள்—ஏன் என்று கேட்பாரில்லை! அவர்கள் வேதனைக் குரலாலே விம்மி விம்மி அழுகிறார்கள்—ஆறுதல் கூறவோ அன்புமொழி பகரவோ எவரும் இல்லை! அவர்களுடைய உள்ளத்திலே துன்பப் புயல் வீசுகிறது — அந்தப் புயலை அடக்கி அங்கு ஆனந்தத் தென்றலை வீசுதற்குரிய வழிகளைத் தேட வேண்டுமே, இல்லையேல் அவர்களுடைய வாழ்வு வறண்டுபோகுமே என்ற கவலை, கனிவு. இரக்கம், பரிதாபம், மனிதாபிமானம் எவருக்கும் தோன்றவில்லை. அவர்கள் அழுகிறார்கள் — மறுபடியும் மறுபடியும், அந்தக் கண்ணீர் யாராலும் துடைக்கப்படவில்லை, அது, தானே வடிந்து காய்ந்து கன்னங்களைக் கறையாக்கிக் கொண்டிருக்கிறது—இந் நிலையில் அவர்கள் உள்ளம் எவ்வளவு வேதனைப்படும் —யார் சிந்தித்தார்கள் அதை?

பசியால் வாடும் குழந்தை தன் அருமைத் தாயைப் பார்க்கிறது, தாயோ தன் கணவன் முகத்தைப் பார்க்கிறாள், அவனோ அந்தத் தறியைப் பார்க்கிறான், தறியோ சென்னை சர்க்காரைப் பார்க்கிறது —அவர்கள்தான் என்ன செய்வார்கள் பாவம், அவர்கள் டில்லியைப் பார்க்கிறார்கள், 'டில்லி'யோ குனிந்து தரையையோ அங்குள்ள மக்களையோ பார்ப்பதில்லை, ஆகாயத்தைப் பார்க்கிறது, அங்கே வடநாட்டு வணிக வேந்தர்களின் பஞ்சாலைகளிலிருந்து சுருண்டு சுருண்டு எழும் புகை தெரிகிறது, அந்தப் புகை குறையாமல் இருந்தால் சரி —மில்கள் வளர்ந்தால் சரி என்று முழுத் திருப்தி அடைகிறது அந்த "நம்ம சர்க்கார்", இந் நிலையில் ஏழை நெசவாளர்களின் இல்லத்திலிருந்து எழும் பசியால் அலறித் துடிக்கும் பச்சைப் பிள்ளையின் சிறு குரல் அந்த ஆளவந்தார்களின் செவிகளில் ஏன் விழப்போகிறது! பிர்லாக்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை டெலிபோன் மூலம் ஓயாமல் கேட்டுத் தீரவேண்டிய மகத்தான தேசோத்தாரணப் பணியில் அல்லவா அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்! அவர்கள் செவியிலா இந்த ஏழைப் பாட்டாளிகளின் வேதனைக் குரல் விழப் போகிறது?

கண்ணீர் சிந்துகிறார்கள் ஆயிரமாயிரம் நெசவாளர்கள் அவர்களின் கவலையைத் துடைக்க வேண்டுமே என்ற கவலை காருண்யமுள்ள நம் காங்கிரஸ் சர்க்காருக்குக் கடுகளவேனும் இருப்பதாகத் தெரியவில்லை. உற்பத்தி செய்த ஆடை வகைகளோ தன் தறிக்குழியின் மண்ணோடு மண்ணாக முடங்கிக் கிடக்கிறது, விற்கலாம் என்று கடைவீதிக்கு எடுத்துக்கொண்டு சென்றாலோ அகவிலைக்கும் குறைவாகக் கேட்கிறான் சேட் ராம்லால், என் செய்வது என்று தெரியவில்லை வாழ்வது எப்படி என்று புரியவில்லை— நெசவுத் தொழில்புரியும் நல்லதம்பி திகைக்கிறான், அவன் மனைவி திகைப்புடன் சொல்லாது தேம்பி அழுகிறாள், சர்க்காரோ இதுபற்றி கண்ணெடுத்துப் பார்க்கவும் மறுக்கிறார்கள்! ஏன் இந்த நிலை! என்ன பாபம் செய்தனர் அந்தப் பாட்டாளிகள் இத்தகு நிலையில் சிக்குண்டு சிதைய! உழைத்து உழைத்து உருக்குலைந்தது ஒன்றைத் தவிர அவர்கள் செய்த

(8-ம் பக்கம் பார்க்க)

25—12—48 சனிக்கிழமை

குடந்தை மண்ணில்

கொட்டிய குருதி!

★

சிறுமதி படைத்த சர்க்கார் செயலாலே விலா எலும்பு முறிந்து ஆஸ்பத்திரியில் கிடக்கும் எங்கள் அருமைச் **சிதம்பரமே!**

படுகாயம் அடைந்து படுக்கையில் கிடந்து கொலை பாதக ஆட்சியினரின் கொடுமையை அனுபவிக்கும் தோழர் **துரைராஜே!**

பலத்த அடிபட்டு தரைமண்ணில் தலைசாய்த்து சுருண்டு வீழ்ந்தாலும் செந்தமிழ்ச் செம்மொழியை வாழ்த்த மறவாத வீரத்தமிழா, **ராஜரங்கமே!**

முதுகில் தடியடி கொஞ்சிய காரணத்தால் பிண மெனத் தரையில் சாய்ந்து அனல்படு புழுவெனத் துடிதுடித்த **சாமிநாதா! முத்துசாமி!**

மண்டையில் பலத்த அடிபட்டு ரத்தம் பீறிட்டு விழ விழ வாழ்க செந்தமிழ் வாழ்க செந்தமிழ் என வீர முழக்கமிட்ட **குடவாசல் சீனிவாசா!**

பெண் என்றும் பாராது பேயர்கள் கைபிடித்து இழுத்து தூரத் தள்ளியபோதும் அஞ்சாத நெஞ்சுடன் இடம்விட்டுப் பெயராது நின்று அறப்போர்க் கடனாற்றிய வீராங்கனையே, **புஷ்பவேணியே!**

ஆளவந்தார்களின் அக்கிரமச் செயலாலே குண்டாந்தடியடி பட்டு குருதி கொட்ட நேர்ந்தாலும் தமிழ் காக்கும் தூய பணியினின்று பிறழோம் பிறழோம் என அஞ்சாதொலித்த **நூர்கானே, கே. கே. பானுவே, எம். எஸ். மணியே, டி. பி முத்தே, இருதயசாமியே, ராமாநுஜமே!**

தொண்டர்களை மட்டுமா தூர்த்தர்கள் தடியால் அடித்துத் துன்புறுத்த விட்டோம் நாங்களும் எங்கள் தமிழ் வளர்ச்சிக்காக இரத்தம் சிந்தவும் தயார் தயார் என முழக்கமிட்ட வண்ணம் தொண்டர்களைப் பின் தொடர்ந்து வந்து அஹிம்சா மூர்த்திகளின் அக்கிரமத் தடியடிக்கு ஆளான பல்லாயிரக்கணக்கான **குடந்தைப் பொது மக்களே, தோழர்களே, தாய்மார்களே, தீரர்களே!**

வாழ்க நும் கொற்றம்! வெல்க நும் தொண்டு!

நீங்கள், அறநெறி பிறழ்ந்த இந்த ஆணவ ஆட்சியினரின் காட்டாட்சிக் கொடுமையின் விளைவாக சென்றகிழமை கொட்டிய குருதியை, ஏற்ற படு காயத்தை, அனுபவிக்கும் வேதனையை, சிந்திய கண்ணீரை, பட்ட தடியடியை, பாழும் அனுபவத்தை திராவிடநல் திருநாடு எண்ணி எண்ணி வேதனைப்படுகிறது; அந்தோ இது கொடிது கொடிது என்று சொல்லி இரத்தக் கண்ணீர் வடிக்கிறது; பாழும் இந்திப் படையெடுப்பினின்று பைந்தமிழுக்குப் பாதுகாப்புத் தேடவேண்டுமானால் அதற்குத் திராவிட இளங்காளைகள் தம் செங் குருதியைக் கொட்டித் தான் ஆகவேண்டுமா, வேறு வழி இல்லையா என்று வாய்விட்டுச் சொல்லி உள்ளம் குமுறுகிறது.

தமிழர் சமுதாயத்தில் தாளமுத்தோ நடராசனோ வேலாயுதமோ ஒவ்வொருவர்தான் உண்டு என்றெண்ணிக்கொண்டிருந்த சர்க்காருக்கு ஆயிரமாயிரம் தாளமுத்துகளை நடராசர்களை வேலாயுதங்களை தமிழன்னை தமிழருக்கு அளித்திருக்கிறாள் என்பதை நிரூபித்துக் காட்டிவிட்டீர்கள்.

மண்டையில் அடிபட்டு மண்ணில் சாய நேர்ந்தாலும் உரிமைப் போர் ஆற்ற ஒரு சிறிதும் அஞ்சாத லாலா லஜபதிகள் பாஞ்சாலத்தில் மட்டும்தான் உண்டு என்று எண்ணி ஓமந்தூரார்கள் இறுமாந்து கிடந்தார்கள். அல்ல! தவறு! லாலா லஜபதிகள் தமிழர் சமுதாயத்தில்தான் ஏராளம் என்னும் உண்மையை நடைமுறையில் நிலைநாட்டி விட்டீர்கள்!

திருப்பூர் குமரன் ஒருவன்தான் அவனும் மாண்டே போய்விட்டான் இனி மீளான் என்று கருதி, எத்தகைய அடக்குமுறை சட்டிகளை வேண்டுமானாலும் மக்கள்மீது எய்யலாமென முடிவு கட்டிக்கொண்டு முன்வந்த சர்க்காரின் மூடத்தனத்தை முறியடித்து விட்டீர்கள், 144 எனும் நச்சரவத்தை அடித்துக் கொன்றுவிட்டீர்கள்!

உங்களுடைய தியாகத்தை, தீரத்தை, அஞ்சாமையை, ஆண்மையை, செந்தமிழ்ப் பற்றை, செங்குருதி சிந்த நேர்ந்தாலும் கடமையிலிருந்து வழுவாத இலட்சிய உறுதியை தமிழகம் தான் உள்ளளவும் மறவாது. தமிழர் உள்ளம் ஒருபோதும் மறவாது. தமிழ்நாட்டு வரலாறோ இதை நிச்சயம் மறக்க முடியாது.

உலகத்தில் செந்தமிழ் நாடு எனும் நிலப்பரப்பு உள்ள வரையில், கடைசித் தமிழன் ஒருவன் உயிரோடு உலவும் வரையில், அவன் உடலில் ஒரு சொட்டு இரத்தமேனும் இருக்கும் வரையில் உங்கள் தியாகம் மறையாது மங்காது.

மண்ணுக்காகப் போராடியவர்கள் உலக வரலாற்றில் ஏராளம். தாய் நாட்டைக் காக்கவும் தலைவர்களை மீட்கவும் தம் உடமைகளைப் பாதுகாக்கவும் எத்தனையோ பேர் போரிட்டிருக்கிறார்கள். பெண்ணுக்காகவும் பொன்னுக்காகவும் போராடியவர்கள் கணக்கற்றவர்கள். பாட்டாளிகளின் உரிமைக்காகவும் அடக்கி ஒடுக்கப்பட்டோரின் சார்பாகவும் போராடிய வீரர்களையும் வரலாறு பலமுறை கண்டிருக்கிறது. ஆனால் தம் சொந்த மொழிக்காக, அந்த மொழியின் உரிமைகளை, வந்து படையெடுக்கும் பிறமொழிக் குண்டர்களிடமிருந்து காப்பதற்காகப் போராடியவர்கள், அந்தப் போராட்டத்தில் குருதி கொட்ட நேர்ந்த

போதும், சளைக்காது நின்று சமர்புரிந்தவர்கள் என்ற தனிப் பெருமை தமிழ் இனத்தார் ஒருவர்க்கு மட்டுமே உண்டு என்ற சரித்திரத்தை உங்கள் இரத்தத்தால் நீங்கள் எழுதிவிட்டீர்கள் உலக வரலாற்றில்!

உங்கள் எலும்பு முறிந்து வீழ்ந்தது. உங்கள் உடலிலிருந்து இரத்தம் ஆறெனப் பெருக்கெடுத்தோடியது. உங்கள் மார்பிலேயும் முதுகிலேயும் தடியடி தன் உரிமை முத்திரையைப் பொறித்தது. உங்கள் தலையிலே சர்க்காரின் ஈட்டிமுனை குத்திக் குத்திக் கோர நடனம் செய்து பார்த்தது. இவ்வளவுக்கும் நீங்கள் இடம் விட்டுப் பெயர்ந்தீர்களா—இல்லை! போலீசாரை எதிர்த்து ஒரு சுண்டு விரலையேனும் அசைத்தீர்களா —கிடையாது! எதிர்த்துத் தாக்க வேண்டும் போலீசாரைப் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்ற நினைப்பு துளியேனும் உங்கள் உள்ளத்தில் தோன்றியதா—கிடையாது கிடையாது! சர்க்காரின் குண்டாந்தடிகள் உங்கள் உடலை வாட்ட வாட்ட நீங்கள் புன்முறுவல் பூத்தமுகத்தோடு அந்தக் கொடுமையை ஏற்றுக் கொண்டீர்கள். உலக்கைத் தடி உங்கள் மெல்லுடலை தயவு தாட்சண்ணியமின்றி பதம் பார்த்தபோது, குருதி உங்கள் உடலிலிருந்து மழையெனக் கொட்டியபோது, விலா எலும்பும் கால் எலும்பும் அடுத்தடுத்து முறிந்து வீழ்ந்தபோது, நரம்புகள் அறுபட்டு நல்லுடல் துவண்டு தசைநார் துண்டாடப்பட்டபோது நீங்கள் ஐயோ அம்மா என்று கூவினீர்களா? இல்லை இல்லை. தாளமுத்தே நடராசா என்று கூவினீர்கள்! தமிழ் வாழ்க பெரியார் வாழ்க என முழக்கமிட்டீர்கள்!

சர்க்கார் கட்டளையிட்ட காரணத்தால் போலீசார் அத்துமீறிச் சென்றபோது, அவர்கள் உங்களை நெஞ்சில் ஈரமின்றி வாட்டி வாட்டி வதைத்தபோது, நீங்கள், ஈவு இரக்கமற்ற இந்த சர்க்காரேகூட கண்டு அஞ்சும் அளவுக்கு, அதிசயிக்கத்தக்க பொறுமை காட்டினீர்கள். தலைவர் பெரியாரின் கட்டளையை எழுத்துக்கெழுத்து நிறைவேற்றினீர்கள்.

உடலில் பலமான அடி மீண்டும் மீண்டும் வீழ்ந்து கொண்டிருக்கும்போது, உடலிலிருந்து குருதி கொட்டிக்கொண்டிருக்கும்போது, ஆத்திரம் காட்டாமல் இருப்பதென்பது, ஆவேசம் கொள்ளாமல் பொறுமையைக் காப்பதென்பது, அமைதியின் சின்னமாய் சாந்தத்தின் உருவமாய் புன்முறுவல் பூத்தமுகத்தோடு இருப்பதென்பது சாதாரணமான காரியமல்ல. அற்புதமான மனவலிமையும், ஈடு இணையற்ற அஞ்சாமைப் பண்பும், இலட்சியத்தின் வெற்றியில் தளராத நம்பிக்கையும் படைத்த ஒரு சிலரால் மட்டுமே கடைப்பிடிக்கக்கூடிய அபூர்வமான அறப்போர் முறை அது. அந்த அபூர்வமான திறமை உங்களிடத்தில் பரிபூரணமாக அமைந்திருக்கிறது என்பதை நீங்கள் சென்ற கிழமை தரணிக்கெல்லாம் எடுத்துக் காட்டிவிட்டீர்கள்.

ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்து அறப்போர் நடைபெற்ற அந்தக் காலத்தில்கூட சத்தியாக்கிரகிகள் இவ்வளவு பொறுமையை, சாந்தத்தை, சமாதான உணர்ச்சியை, சகிப்புத் தன்மையை நிலைநாட்டியது கிடையாது. சர்க்காரின் அடக்குமுறை ஒரு குறிப்பிட்ட அளவைக் கடந்தபோதெல்லாம் அவர்கள் போலீசைத் திருப்பித் தாக்கச் சிறிதும் தயங்கியதில்லை. அஹிம்சை அஹிம்சை என்று பேசிக்கொண்டே ஆள் கொல்லிகளாக மாற அவர்கள் அஞ்சியதில்லை. ஆனால் நீங்களோ, அளவுகடந்த பலாத்காரம் உங்களைச் சூழ்ந்து நின்று, பொறுக்க முடியாத அளவுக்குத் துன்புறுத்தியபோதும், தினைத்துணை அளவும் அஹிம்சைப் பாதையிலிருந்து வழுவினீர்களில்லை. போலீசார் மீண்டும் மீண்டும் உங்கள் சிறு உடலைச் சிதைத்துக் கொண்டிருந்தபோதும், நீங்கள், "போலீசார் நம்மவர்கள். நம் இனத்தவர்கள். நம் அண்ணன் தம்பிகள். நம் மாமன் மைத்துனர்கள். நம் பெரியப்பா சிற்றப்பாக்கள். அவர்கள் நம்மை அடிக்கிறார்கள், துன்புறுத்துகிறார்கள், கொடுமைப் படுத்துகிறார்கள்! ஆம்! ஆனால் அது அவர்கள் குற்றமில்லை! சர்க்கார் ஊழியர்கள் அவர்கள்! ஆகவே அவர்கள் தம் கடமையைச் செய்கிறார்கள்" என்ற உயர்ந்த நோக்கம் கொண்டு, உன்னத இலட்சியபுரியில் உலவியவண்ணம் முழு அமைதியைக் கட்டிக் காத்தீர்கள். பொறுமை எனும் குணக்குன்றேறி நின்ற புத்தர்போல் தோற்றம் தந்தீர்கள். கடமாடும் ஏசுநாதர்களாக, தமிழைக் காட்டிக் கொடுக்கும் ஜூடாஸ்களின் கண்களுக்குக்கூட காட்சி அளித்தீர்கள். தியாகத்தின் சின்னங்களே! உங்கள் அஞ்சாமையின் முத்திரை எங்கள் உள்ளத்தில் எல்லாம் அழுத்தமாகப் பதிந்துவிட்டது. எந்தச் சூறாவளியும் இனி அந்த முத்திரையைப் பெயர்த்தெடுக்க முடியாது.

தியாகிகளே! தீரர்களே! நடமாடும் சங்க இலக்கியங்களே! திருக்குறள் இலக்கியத்தின் மனித உருவங்களே! உங்களுக்குத் தலை வணங்குகிறோம். உங்களுடைய தியாகத்தின் சிறப்பை நினைத்து நினைத்துப் புளகாங்கிதமடைகிறோம். உங்களுடைய வீரத்தின் மாட்சியை எண்ணி எண்ணி களிப்பினால் துள்ளுகின்றோம். உங்கள் சகிப்புத்தன்மை ஈடு இணையற்றது, நேர் நிகர் அற்றது, வரலாற்றுச் சுவடிகளில் வேறு உதாரணம் அற்றது என்னும் உண்மை ஒவ்வொரு வினாடியும் எங்கள் உள்ளத்திற்கு வீர உணர்ச்சியை, தியாக உணர்ச்சியை, செந்தமிழ் உணர்ச்சியை, பெரியார் உணர்ச்சியை ஊட்டிய வண்ணம் உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விழைகிறோம்.

நாங்கள், தமிழகத்தில், ஒரு பெரியாரும் ஒரு அண்ணாவும்தான் உண்டு என்று இதுநாள்வரை எண்ணிக்கொண்டிருந்தோம் ஆனால் இன்று பெரியாரும் அண்ணாவும் ஒவ்வொருவரே அல்ல தமிழகத்தில் இருப்பது, ஆயிரமாயிரம் என்பதை அறிந்துகொண்டோம். அறிவித்துவிட்டது உங்கள் தியாகம்!

நடராசனைக் கண்டோம், பெருங்களிப்புக் கொண்டோம். தாளமுத்தை அறிந்தோம், வீறு கொண்டெழுந்தோம். பிறகோர் நாள் வேலாயுதம் எதிரே வந்தார். வீரத்தால் துள்ளிற்று எங்கள் உள்ளம். இன்றோ சிரித்த முகத்தோடு சர்க்காரின் சித்திரவதைக்கு ஆளாகும் உங்களைக் காண்கிறோம். வீரமா இன்பமா தியாகமா தீவிரமா எல்லா உணர்ச்சியும் கொள்கிறோம்.

உங்கள் உடல் சிதைந்தது—உள்ளம் வெதும்புகிறோம். உங்கள் குருதி கொட்டியது—கண்ணீர்

(9-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பாவம் இன்னது என்று யார்தான் கூறமுடியும்?

இன்று தென்னாட்டு நெசவாளர்களின் வாழ்க்கையிலே சோகம் கப்பிக்கொண்டிருக்கிறது என்றால் அது அவர்களுடைய செயலாலே வந்த விபரீதமா—இல்லை! அவர்களுடைய சோம்பலாலே நேரிட்ட பின்விளைவா?—கிடையாது! பூந்தோட்டத்திலிருந்து பாலைவனத்திற்கு அவர்களாகவே பயணம் தொடங்கி விட்டார்களா — ஒரு போதுமில்லை! **இந்திய சர்க்காரின் சிறுமதிச் செயலாலே வந்து மூண்டுவிட்ட வேதனைத் தீயேதான் இது.** என்றாலும் இதை அணைக்க ஒரு நெருப்பணைக்கும் எஞ்சினைக்கூட அனுப்ப மனமில்லை சர்க்காருக்கு! அனுப்பவேண்டுமே என்ற பொறுப்புணர்ச்சியோ துளியும் இல்லை.

1948 ஜூலை 30 வரையில் நம் நாட்டில் உற்பத்தியாகும் கைத்தறி ஜவுளிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி ஆவதுபற்றி எத்தகைய தடையும் இல்லை, ஆனால் ஆகஸ்டு 1 முதல் இந்திய சர்க்கார் இந்த நாட்டு கைத்தறித் துணிகள் பிற நாடுகளுக்கு மிக மிகக் குறைவான ஒரு சிறு அளவு தவிர மேற்கொண்டு ஏற்றுமதியாகக் கூடாது என்று தடைவிதித்துவிட்டனர்—சென்னை சர்க்கார், கும்பகோணம் கோயில்பட்டி கடலூர் வேலூர் முதலிய பல இடங்களில் இனிய தமிழ் வாழ்க என உரைக்கும் பேச்சுரிமைக்குக்கூட தடை விதித்துவிடவில்லையா தான் தோன்றித் தனமாக, அதுபோல! அதன் விளைவுதான் இன்று கைத்தறி நெசவாளர்தம் வீட்டிற்கு வீடு தாண்டவமாடுகின்ற பசி! பட்டினி! பஞ்சம்! பரிதவிப்பு!

சர்க்காரே மூட்டிவிட்ட தீ! அது அந்தப் பாட்டாளிகளின் வீடுகளைச் சுட்டுச் சாம்பலாக்குகிறது! ஆனால் சர்க்காரோ இதுபற்றி சற்று சிந்திக்கவும் மறுக்கிறார்கள், தங்கள் மடமைச் செயலாலே நேர்ந்த மதிகேட்டிலிருந்து மக்களை மீட்க வேண்டுமே என்ற நினைப்பு சிறிதுமின்றி நித்திய உறக்கம் உறங்குகிறார்கள்! இன்னும் சொல்லப்போனால் உறங்குவதுபோல நடிக்கிறார்கள்!

பர்மா மலேயா பினாங்கு சிங்கப்பூர் பாகிஸ்தான் பகுதிகளிலே உள்ள மக்கள் கைத்தறி ஜவுளிகளைத் தேடித்தேடி அலைகிறார்கள்—அங்கே சரக்கு இல்லை! இங்கே நம் நாட்டில் சரக்கு ஏராளமாகக் குவிந்து கிடக்கிறது ஆனால் ஆள் இல்லை, வாங்கி அனுபவிக்க! இங்கு தேங்கிக் கிடக்கும் இச் சரக்குகளை அங்கெல்லாம் அனுப்பினால் இரு சாராருக்கும் அளவற்ற நன்மை. ஆடை கிடைக்க வில்லையே என்று ஆலாய்ப் பறக்கும் அந்த நாட்டு மக்கள் நாம் அனுப்பும் ஜவுளிகளை ஆசையோடு வாங்கிக் கொள்வார்கள்! அதே சமயத்தில் இங்கே விற்பனையாகாமல் வீணாக முடங்கிக் கிடக்கிறதே ஜவுளிகள் அவ்வளவும் என்று வேதனைக்குரல் எழுப்பும் நெசவாளி உடனுக்குடன் தன் ஆடைகள் வெளிநாடுகளில் விலையாகிப் போகின்றன—நமக்குக் கவலையில்லை இனி, இன்பம் நம் குடும்பத்தில் அரசோச்சும் என எண்ணி மகிழ்ச்சியடைவான். இந்த ஏற்பாடு அமுலுக்கு வந்தால் ஜவுளி இங்கிருந்து பறந்தோடிப் போகும் தூர தேசங்களுக்கு! பணம் அங்கிருந்து உருண்டோடி வரும் பாட்டாளியின் வீட்டிலிருக்கும் சிறு பானையை நோக்கி! இங்கே, நம் நாட்டில், ஜவுளியை உற்பத்தி செய்யும் பாட்டாளிக்கும் அங்கே, பிற நாடுகளில், அவற்றை வாங்கி அனுபவிக்கும் "வாங்குபவர்"களுக்கும் இடையே எண்ணற்ற தரகர்கள் (Middle men) இருந்துகொண்டு பாட்டாளி அனுபவிக்க வேண்டிய முழுப் பலனையும் அனுபவியாமல் தடுக்கக் கூடும். ஆனால் அதை சர்க்கார் சட்டத்தின் மூலம் தேவையான அளவுக்கு கட்டுப்படுத்துவது எளிது. கட்டுப்படுத்தத்தான் வேண்டும். ஒரு நல்ல சர்க்கார், ஏழை கைத்தறி நெசவாளர்களின் நன்மையை நாடும் சர்க்கார், எல்லோரும் இன்புற்று இருப்பதுவே அல்லால் வேறொன்று வேண்டாம் என உரைக்கத்தக்க உயரிய சர்க்கார் செய்யவேண்டிய நற்பணி இது. ஆனால் "நம்ம சர்க்கார்", சுயராஜ்ய சர்க்கார், காங்கிரசின் பெயராலே காசினியை ஆளவந்துள்ள டில்லி சர்க்கார் இந்த நல்வழியைக் கடைப்பிடித்தனரில்லை! மாறாக, இங்கு உற்பத்தியாகும் கைத்தறி ஜவுளிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவே கூடாது என்று விபரீதமானதோர் சட்டத்தைக் கொண்டுவந்தனர், அது, கைநெசவு புரிவோர் வீட்டிற்கெல்லாம் பசியை பட்டினியை பஞ்சத்தைக் கொண்டுவந்தது!

ஏற்றுமதி கூடாது என்று சர்க்கார் போட்ட தடையாலே பெரிதும் வெளி நாடுகளிலேயே விலையாகிக் கொண்டிருந்த கைத்தறி ஜவுளிகள் இங்கே கேட்பாரின்றி மூலையில் முடங்கிக் கிடக்கின்றன. இந்த கைத்தறி ஜவுளிகளில் மிக முக்கியமானதும் வெளி நாடுகளில் ஏராளமாக விலையாகிக் கொண்டிருந்ததும் லுங்கி என்ற ஜவுளி வகை. இதனை நம் நாட்டில் எவரும் விரும்புவதில்லை — இஸ்லாமியத் தோழர்கள் சிலரைத் தவிர! ஆனால் பாகிஸ்தான், மலேயா, பினாங்கு, சிங்கப்பூர், ஆப்பிரிக்கா போன்ற வேற்று நாடுகளில் இவற்றிற்கு மதிப்பு மிக அதிகம், சரக்கும் உடனே விலையாகும். ஆனால் ஏற்றுமதி கூடாது என்று தடை உத்தரவு போட்டுவிட்டது சர்க்கார் எனவே இவை அங்கே போக முடியவில்லை — இங்கோ கேட்பாரில்லை! பண்டம் அதிகமாகக் குவிந்து, கேட்பவர் இல்லையானால் பண்டத்தின் விலை குறையும்—இது சகஜம்! ஏற்றுமதித் தடை விதிக்கப்பட்டதும், ஏற்றுமதியாக முடியாத காரணத்தால், ஏற்றுமதியாக வேண்டிய ஜவுளிகள், ஏற்றுமதியானால் ஒழிய இங்கு விலையாக முடியாத ஜவுளிகள், மார்க்கட்டில் தேங்கலாயின. முதலில் கொஞ்சம், பிறகு இன்னும் கொஞ்சம், பிறகு இன்னும் கொஞ்சம், பிறகு ஏராளம் என்ற அளவிலே தேக்கம் வளர்ந்து வளர்ந்து இன்று மலைபோல் குவிந்திருக்கிறது கேட்பாரற்ற ஜவுளிகள்! அதே நேரத்தில் அவற்றின் விலை இறங்கி இறங்கி அடக்க விலைக்கும் கீழே விழுந்துவிட்டது. அக்டோபர் 31 முடிய ஏறத்தாழ 80,000 பேல்கள் நம் மாகாணத்தில் மட்டும் விலையாகாமல் முடங்கிக் கிடந்தன என்று புள்ளி விவரம் பேசுகிறது! இப்போது மேலும் மூன்று மாதங்கள் கடந்துபோன காரணத்தால் மேலும் ஓர் 80,000 பேல்கள் முடங்கி விட்டிருக்கும் என்று எளிதில் நாம் உய்த்துணரலாம். ஆக இந்த ஒரு இலட்சத்து பதினாயிரம் பேல்கள் [1,16,000] திராவிட நாட்டு மார்க்கட்டில் தங்குமானால், விலை எவ்வளவு இறங்கிப்

(10-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

சிந்துகிறோம். உங்கள் எலும்புகள் முறிந்தன—அலறித் துடிக்கிறோம். ஆனால் உங்கள் தியாகம் தமிழ் இனத்தை உயர்த்திவிட்டது—நெஞ்செல்லாம் பூரித்துப் போகின்றோம்.

இந்த ஓமந்தூர் சர்க்காருக்கு, இருதயம் கிடையாது—ஆகவே உங்களை அடித்துத் துன்புறுத்தினார்கள்; அறிவுத்தெளிவு கிடையாது—ஆகவே உங்களை லாரியிலிருந்து வீசி எறிந்தார்கள்; மனிதப் பண்பு கிடையாது—ஆகவே மெல்லியல் நங்கையரையும் கைபிடித்திழுத்துத் தூரத் தள்ளினார்கள்; ஆனால் அதிகார போதை உண்டு—ஆகவேதான் உங்களுக்கு சிந்திய இரத்தத்தைப் பரிசாகக் கொடுத்தார்கள். நீங்களோ பெரியார் என்ற பல்கலைக் கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றவர்கள்—ஆகவே சிரித்த முகத்தோடு சிந்திய இரத்தத்தை ஏற்றுக் கொண்டுவிட்டீர்கள்.

"மங்கை ஒருத்தி தரும் சுகமும் எங்கள் மாத் தமிழ்க்கு ஈடில்லை' என்றுரைப்போம்—பங்கம் விளைத்திடில் தாய் மொழிக்கே உடல் பச்சைரத்தம் பரிமாறுவோம்" என்று கவிதை தீட்டினார் **பாரதிதாசன்.** இது வெறும் கவிதை என்றெண்ணினோம். இல்லை, திராவிட இளங்காளைகளின் உள்ளம் என்பதை நிரூபித்துக் காட்டிவிட்டீர்கள்.

பெரியார் பெரும்படையின் முன்னணி வீரர்களே, நீங்கள் சென்ற கிழமை குடந்தைத் தெரு மண்ணில் கொட்டிய குருதி வீண்போகாது. அது, காட்டினை வேகமாக வளர்ந்துவரும் ஹிந்தி ஏகாதிபத்தியத்தை நிச்சயம் வீழ்த்தியே தீரும். ஆம்! இது உண்மை வெறும் புகழ்ச்சியில்லை.

அறம் வெல்லட்டும்! மறம் மடியட்டும்! தமிழ் ஓங்கட்டும்! அதை அழிக்கவரும் ஆபத்துகள் அத்தனையும் அழியட்டும்! இந்த உயரிய இலட்சியங்களுக்காக நீங்கள் சிந்திய இரத்தம் அதன் கடமையை நிறைவேற்றட்டும்.

வெல்க நும் தியாகம்! வெல்க நும் தொண்டு! தமிழ் வெல்க—வெல்க!

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் நம்பிக்கை இன்னும் முற்றிலும் தேய்ந்துவிடவில்லை, அவர்கள் தலைமையில் நீண்ட நாள் போராடியதால் ஏற்பட்ட பாசமும் பற்றும் இன்னும் மறைந்துவிடவில்லை, ஆகவே அவர்கள் படேல் நேரு இருவரும் ராஜினமா செய்துவிடுவோம் என்று மிரட்டியவுடன் "சரி சரி! கோபம் வேண்டாம் ஐயன்மீர்" என்று சொல்லி அவர்கள் கொண்ட கோபத்தைத் தணித்தனர். ஆனால் இதனாலேயே காங்கிரஸ்காரர்கள் படேலும் நேருவும் என்ன செய்தாலும் பொறுத்துக் கொண்டுதான் இருப்பர் என்றெண்ணுகிறார்கள். ஐக்கும் என்று அவர்கள் எண்ணினால் நிச்சயம் ஏமாந்துதான் போவார்கள். ஏதோ அவர்கள் முகத்துக்கெதிரில், அவர்களையும் சேர்த்து எல்லா மந்திரிகளையும் கண்டிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றக் கூடாதே என்றெண்ணி, அவர்கள் விரும்பியபடி, காங்கிரஸ் உறுப்பினர்கள், திருத்தத்தை தோற்கடித்துவிட்டாலும் முதலில் பெருவாரியான ஓட்டுகளால் மந்திரிகள் கூட்டத்தையக் கண்டிக்கும் தீர்மானம் நிறைவேறியிருப்பதை அவர்கள் மறந்துவிட வேண்டாம்!'

* * *

சௌத்ரியிலிருந்து மிஸ்ரா ஸ்டேஷனுக்குப் பயணம் செய்த வண்ணம் உள்ளனர் காங்கிரஸ்காரர்கள்! இது இப்போது! ஆனால் ஒரு நாள் வரும்—அந்த நாள் விரைவில் வந்துகொண்டிருக்கிறது—மிஸ்ராவிலிருந்து, ஜெயப்பிரகாஷ், ம. பொ. சிவஞானம் முதலிய ஸ்டேஷன்கள் வழியாக திரு.வி.க. ஸ்டேஷனுக்கு காங்கிரஸ்காரர்களிற் பெரும்பாலோர் வந்து சேரும் நாள்! அதாவது காங்கிரசை ஒழிப்பதே இனி என் மூச்சு என்று அவர்கள் ஒவ்வொருவரும் சூள் உரை புகலும் நாள்! அந்த நாள் வரும் நாளே நாட்டுக்கு நல்ல நாள்!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குடந்தைத் தளபதிகள் தோழர்கள் கே. கே. நீலமேகம், பி. ஆர். பொன்னுசாமி, முத்துதனபால், எஸ். கே. சாமி ஆகியோரும் தோழியர் மணி அம்மையாரும் சென்ற ஒரு வார காலமாக சிறையிலே கிடந்துவாடுகின்றனர்.

தளபதி அண்ணா அவர்கள் குடந்தையில் தங்கி, சர்க்காரின் ஆணவ அடக்குமுறை கண்டு குமுறிக் கொந்தளிக்கும் குடந்தையை சாந்தப்படுத்திய வண்ணம் இருக்கிறார்.

எந்த நேரத்திலும் எதுவும் நிகழக்கூடும். எவ்வளவு கோரமான அடக்குமுறைக்கும் இருகை நீட்டிய வண்ணம் தயாராகவே உள்ளனர் தன்மானத் திராவிடர்கள். தங்கள் கரம் ஓயுமட்டும் பொது மக்களைத் தாக்கித் தாக்கி பிறகேனும் ஓய்வாக இருந்து சிந்திக்கட்டும் ஓமந்தூரார்கள்—இத்தகைய கொடுங்கோலாட்சி புரிவது நியாயந்தானா என்பதைப்பற்றி!

படித்து விட்டீர்களா?

★

பிள்ளையோ பிள்ளை	0	6
வாழ்க திராவிடம்	0	4
கடவுளால் ஆகாதது	0	8
சமதர்மம்	0	4
பேனமுனை	0	2
அம்பேத்கார்	1	0
இன்பக் கனவு	0	12
இராதை சிரித்தாள்	0	6
ஆரியப் புல்லுருவி	0	6
1858—1948	1	0
மறுமலர்ச்சிக் கவிதை	0	8
இந்தி மறுப்புப் பாடல்கள்	0	3
தன் மதிப்புப் பாடல்கள்	0	6
கோமில ராணி	1	0
தீ பரவட்டும்	1	0
பரமசிவனுக்குப் பகிரங்கக் கடிதம்	0	3
புதிய பாதை	0	12
முல்லைக்காடு	0	12
வாலிபர் தேவை	0	2

★

பகுத்தறிவுப் பாசறை

பவழக்காரத் தெரு,
சென்னை 1.

(8-ம் பக்கம் தொடர்ச்சி)

போயிருக்கும் என்பதை அறிய P. J. தாமசோ ஒரு டாக்டர் ஜான் மத்தாயோ தேவையில்லை சாதாரணப் பொது அறிவு படைத்த எவருக்கும் இது எளிதில் புலப்படும். விலை எவ்வளவு இறங்கிப் போயிருக்கிறது என்பதற்கு இதோ புள்ளி விவரம்:—

ஏற்றுமதித் தடையின் விளைவு!

ஜவுளியின் பெயர்	பீஸ் ஒன்றின் விலை	
	சர்க்கார் தடைக்கு முன்பு	சர்க்கார் தடைக்குப் பின்பு
அமரிக்குப்பம் லுங்கி	ரூ. 13—0—0	ரூ. 5—12—0
20×20 லுங்கி காடா	15—0—0	10— 0—0
60×40 fast colour லுங்கி	27—0—0	17— 0—0

ஏற்றுமதித் தடையின் விளைவு மொத்தம் இவ்வளவுதான் என்று எண்ணிக்கொள்ளாதீர்கள், இது அந்த விளைவுகளில் ஒரு பகுதி. வேறுபகுதி இருக்கிறது, முடிவான பகுதி, முக்கியமான பகுதி—பசி! பட்டினி! பஞ்சம்! என்னும் மூன்று சொற்களாலே அழைக்கப்படும் பகுதி, அதை மறந்துவிடாதீர்கள்.

அமெரிக்குப்பம் லுங்கி 13 ரூபாயிலிருந்து 5-12-0க்கு இறங்கியிருக்கிறது, 20×20, 15 ரூபாயிலிருந்து 10க்குப் படுத்துக்கொண்டது, 60×40, 27லிருந்து 17க்கு வந்திருக்கிறது வந்திருக்கிறது என்றால் இந்த அளவிலேயே விலை நின்றுவிடும் என்றல்ல அர்த்தம், இனியும் இறங்கும்—இறங்கிக் கொண்டேதான் இருக்கிறது! ஏழை நெசவாளரின் குடும்பத்தை பட்டினி எனும் பாழ்ங் கிணற்றில் இறக்கிக் கொண்டேதான் இருக்கிறது!

அமெரிக்குப்பம் லுங்கி பீஸ் 5-12-0 ரூபா விற்கிறதே இன்று, இது அவ்வளவும் ஏழை நெசவாளனின் இலாபம் அல்ல, பீஸ் ஒன்றிற்கு அவற்றை வாங்கி விற்கும் சேட் அவனுக்குத் தரும் விலை! இந்த விலையிலிருந்து அதன் மூலப் பொருள்களின் கிரயத்தைக் கழித்துப் பார்த்தால்தான் அவனுடைய இலாபம் எவ்வளவு என்பது தெரியும்! கழித்துப் பார்ப்போம்: ஓயாது உழைத்து உழைத்து அந்த உழைப்பின் பயனால் உருவாகிய லுங்கி—அமெரிக்குப்பம் என்ற தினுசை முதலில் எடுத்துக்கொள்வோம்—பீஸ் ஒன்றிற்கு அவனுக்குத் தரும் கிரயம் ரூபா 5-12-0. இந்த ஒரு பீஸ் உருவாக அவனுக்கு முக்கியமாக மூன்று செலவினங்கள் உள்ளன 1. நூல் வாங்க வேண்டும் — நூல்தானே ஜவுளியாக மாறுகிறது அவனுடைய உழைப்பின் திறத்தால்! 2. பாவோட வேண்டும், அந்த வேலைக்குப் பலரின் ஒத்துழைப்பு தேவை, எல்லோருக்கும் கூலி தர வேண்டும் 3. சாயம் தோய்க்க வேண்டும். இந்த மூன்றிற்கும் அவன் செலவிடும் தொகை ரூபா 4-4-0. முடிந்த பொருளின் விலை 5-12-0. மூலப் பொருளின் விலை 4-4-0 ஆக ஒரு பீஸ் நெய்தால் நெசவாளி பெறும் ஊதியம் ரூபா 5-12-0—4-4-0=ரூபா 1-8-0! மாதம் ஒன்றிற்கு ஒரு நெசவாளி சாதாரணமாக 15 பீஸ்தான் நெய்ய முடியும்: நினைவு வைத்துக் கொள்ளுங்கள் ஒரு பீஸ் என்பது 8 கெஜம்! 15 பீஸ் என்பதை கெஜமாக்கிப் பார்த்தால் 120 கெஜம் ஆகிறது, அதாவது சராசரி ஒரு நாளைக்கு 4 கெஜம்! இதற்குமேல் ஒரு நெசவாளி சாதாரணமாக செய்ய முடியாது. பீஸ் ஒன்றிற்கு அவன் பெறும் ஊதியம் ஒரு ரூபா எட்டணா என்பதை மேலே கண்டோம். ஆகவே மாதம் முழுவதும் அவன் நெய்யும் 15 பீஸ்களுக்கு அவன் பெறும் ஊதியம் 1-8-0×15 =ரூபா $22\frac{1}{2}$. ஒரு நெசவாளி மாதம் முழுவதும் ஓயாது உழைத்தால் அவன் பெறக்கூடிய ஊதியம் ரூபா $22\frac{1}{2}$. ரிக்ஷா இழுப்பவர்கள் கூட மாதம் ரூபா 60 சம்பாதிக்கிறார்கள் சென்னையில்! கக்கூஸ் எடுப்பவர்களின் மாத சம்பளம் ரூபா 40 அல்லது 50 இருக்கிறது. ஆனால் இந்த ஏழை நெசவாளனோ 22 வெள்ளிக்காசுகளைக் கொண்டு ஒரு மாத காலம் தன் குடும்பத்தை நடத்தித் தீரவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருக்கிறான். ஏற்றுமதித் தடை வருமுன்னால் பீஸ் ஒன்றிற்கு ரூ 3 அல்லது 4 கிடைக்கும் நெசவாளிக்கு! மாதம் ஒன்றிற்கு அவன் ரூபா 40 முதல் 60 வரை சம்பாதிக்க முடிந்தது ஆனால் டில்லி சர்க்காரின் கபோதிக் கொள்கையாலே நேர்ந்த முதல் விளைவு ஏழை நெசவாளனின் மாத ஊதியம் ரூபா 40 அல்லது 50லிருந்து $22\frac{1}{2}$ என்ற பாதாள நிலைக்கு இறங்கியிருப்பதுதான்! மாதம் 50 ரூபா சம்பாதித்தாலே விலை வாசிகள் விஷம்போல் ஏறிப்போய் இருக்கும் இக்காலத்தில் வாழ்க்கைக் கடலில் குடும்பப் படகை எளிதில் ஓட்டிச் செல்வது என்பது நடவாத காரியம்! ஏகவிலை என்ற சூறாவளியில் சிக்குண்டு படகு சிதறும் அல்லது வாழ்க்கைச் செலவு எனும் பாறையில் மோதுண்டு நொறுங்கிப் போகும் அல்லது கள்ள மார்க்கட் திமிங்கிலங்களால் சுழற்றி அடிக்கப்பட்டு சுக்கு நூறாகும். மாதம் 1500 சம்பாதித்தாலே அது போதவில்லை என்று நம் அமைச்சர்கள், விருந்துக்குவேறு மாதம் 500, படிச் செலவு 1000, பிரயாணச் செலவு 700, கார் அலவன்ஸ் 300, வீட்டு அலவன்ஸ் 200 என்று அடுக்கடுக்காக சம்பளத் தொகையை கூட்டிக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறார்கள் என்றால் ஏழை நெசவாளன் மாதம் 50 ரூபாயிலே எப்படி ஒரு குடும்பத்தை நிர்வகிக்க முடியும்? முடியாது ஆனால் எப்படியோ அந்த இந்திரஜாலத்தை அவன் நடத்திக்கொண்டிருந்தான் ஆனால் அதற்கும் முற்

றுப்புள்ளி வைத்துவிட்டார்கள் இந்த காருண்யமுள்ள காங்கிரஸ் சர்க்கார்! அவன் ஊதியத்தை மாதம் 50 லிருந்து 22½ யாகக் குறைத்துவிட்டார்கள்! இந்த அழகிலிருக்கிறது இந்த சர்க்காரின் இலட்சணம் ஆனால் இவர்களைக் குறைமட்டும் கூறக்கூடாதாம், சர்க்காரிடத்திலே பக்தி காட்ட வேண்டுமாம், நம்ம சர்க்காராயிற்றே என்ற பரிவு தோன்ற வேண்டுமாம் மக்களுக்கு, தர்மோபதேசம் புரிகிறார் தத்துவ ஞானி ஆச்சாரியார் மன்னர் மன்னர்களும் கண்டு பொறாமைப்படக் கூடிய பிரம்மாண்டமான அரண்மனையில் ராஜோபசார வாழ்வு வாழ்ந்துகொண்டு! அதே நேரத்தில் சர்தார் வல்லபாய் படேல் இடியென முழங்குகிறார் "தாங்க முடியாத வரிப் பளுவாலே தத்தளிக்கிறார்கள் இந்திய முதலாளிகள்! அவர்களுக்கு கருணை காட்ட வேண்டும் வரிப் பளுவைக் குறைக்க வேண்டும்" என்று! அவர் அப்படி! இவர் இப்படி! ஆனால் தென்னாட்டில் ஒரு பத்து இலட்சம் குடும்பங்கள் இன்று பட்டினி கிடந்து பரிதவிப்பதுபற்றிப் பேசவோ இருவர்க்கும் நேரமில்லை! பேசவே நேரமில்லை என்றால் அந்த ஏழை நெசவாளர்களின் கண்ணீரைத் துடைக்க அவர்களுக்கு நேரம் எங்கே இருக்கப் போகிறது!

அமெரிக்குப்பம் லுங்கி நெய்பவர்களுக்கு மட்டும்தான் இந்த பட்டினியும் பசியும் பரிதாபக் கதையும் சொந்தம் என்று எண்ணிக் கொள்ளாதீர்கள், எல்லோருக்குமேதான் இந்த நிலை! 20×20 காடா பீஸ் 10 ரூபா இன்று! ஏற்றுமதித் தடைக்கு முன்னால் 15 ரூபா! மூன்றில் ஒரு பங்கு விலை குறைந்துவிட்டது ஆனால் நெசவாளியின் ஊதியமோ படிக்குப் பாதியாகக் குறைந்துவிட்டது! அதே போல 60-க்கு 40 fast colour லுங்கி பீஸ் 27 ரூபாயிலிருந்து 17 ரூபாயாக இறங்கியிருக்கிறது. இந்த 17 ரூபாய்விலை பெறும் பீஸ் ஒன்றை நெய்ய அவனுக்குச் செலவாகும் குறுக்கு நூல் 5 பொங்து ரூ. 4-8-0, நெடுக்கு நூல் 5 பொங்து ரூ. 3-4-0, சாயம் விலை ரூ. 2-8-0, தோய்ச்சல் கூலி ரூ. 1-0-0 ஆக மொத்தம் செலவு ரூ. 11-4-0! முடிந்த பொருளின் விலை 17-0-0-ல் இந்த மூலப் பொருளின் விலை 11-4-0 ஐக் கழித்தால் மிச்சம் இருப்பது ரூ. 5-12-0! அதுதான் பீஸ் ஒன்றிற்கு நெசவாளி பெறும் ஊதியம். அவன் இந்த 60-க்கு 40 லுங்கியை மாதம் 6 அல்லது 7 பீஸ்களுக்கு மேல் நெய்ய முடியாது—இதை நெய்வது கொஞ்சம்கஷ்டம், அகலம் அதிகம், ஆகவே மாதம் ரூ. 40 தான் கிடைக்கும் இந்த பீஸ் நெய்வதன் மூலம்! இந்த அகவிலைக் காலத்தில் நாற்பது வெள்ளிக் காசுகளை எண்ணி வைத்துக் கொண்டா ஒரு குடும்பத்தை ஒப்பேற்ற முடியும்?

மாதிரிக்கு இங்கு மூன்று ரக லுங்கிகளைக் குறிப்பிட்டோம், பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்களே அது போல! ஆனால் உண்மையில் எல்லா ரக லுங்கிகளுமே இந்த வேதனை வெண்பாவைத்தான் வாசிக்கின்றன, பட்டினிப் பட்டாளங்களைத்தான் நாட்டில் உருவாக்குகின்றன! நினைத்துப் பார்த்தால் டில்லி சர்க்கார் தலையைத் தொங்கப் போட்டுக் கொள்ள வேண்டும், இவ்வளவு வேதனை நெசவாளர் குடும்பங்களிலே நடமாடுவதற்கு முதல் காரணம் அவர்கள்தான்! இரண்டாவது காரணம் அவர்கள்தான்! மூன்றாவது காரணமும் அவர்கள் தான்! அவர்களுடைய விசித்திர புத்தியாலே விளைந்த விபரீத சம்பவங்கள் தான் இவ்வளவும்! **ஏற்றுமதித் தடை! ஆம், அதுதான் மூல காரணம் இவ்வளவு துக்கம் நெசவாளர் வீட்டிலே கப்பிக்கொண்டிருப்பதற்கு!**

பத்துலட்சம் குடும்பங்களை இன்று வறுமைத்தேள் கொட்டுகிறது! பட்டினி நித்தநித்தம் அவர்களைப் பதம் பார்க்கிறது! பஞ்சமோ பஞ்சம் என்று பரிதவிக்கிறார்கள் அந்தப்பரிதாபத்திற்குரிய பாட்டாளிகள்! அவர்கள் கேட்பது உணவு—உப்பரிகை அல்ல! வயிற்றுக்குத் தீனி—விதவிதமான அலங்கார போக போக்கியங்கள் அல்ல! வாழ்வதற்கு நாணயமான மார்க்கம்—மாடமாளிகை கூட கோபுரங்கள் அல்ல! இதைக் கூட இன்று ஆட்சிப் பீடம் ஏறி இருக்கும் ஆளவந்தார்களால் தர முடியவில்லை! தராவிட்டால் போகட்டும், மக்களுக்குத் தேவையான எதைத்தான் இவர்கள் தந்தார்கள் வாழும் வழியை நெசவாளர்க்குத் தர, ஆனால் அவர்கட்கு ஏற்கெனவே கிடைத்துவந்த கால் வயிற்றுக் கஞ்சியையும் இனிக் கிடைக்க வழியின்றி செய்துவிட்டார்களே இந்தப் பாழும் ஏற்றுமதித்தடைமூலம், இந்தப் புண்ணிய காரியத்தை ஏன் செய்தார்கள் இந்த மஹாத்மாவின் சீடர்கள்? ஏன் செய்தார்கள், ஏன்?

* * *

டில்லி சர்க்காரே, டில்லிக்குத் துணைபோகும் சென்னை சர்க்காரே, அதோ ஆயிரமாயிரம் நெசவாளர் குடும்பங்கள் இரத்தக் கண்ணீர் வடிப்பதைப் பாருங்கள், வாழ வழியின்றி வாழ்க்கைக்கு ஒரு வழி தேடி அந்த ஏழை நெசவாளர்கள் ஏங்கிப் புலம்புவதைப் பாருங்கள், அவர்கள் கண்களிலிருந்து நீர் மழையெனக் கொட்டுவதைக் கொஞ்சம் கவனித்துப் பாருங்கள், இவர்கள் சிந்துவது வெறும் கண்ணீர்தானே இது எம்மை என் செய்யும் என்றெண்ணாதீர், அந்த நீர்த் துளிகளிலே நெருப்பின் திவலைகள் பல நிழலாடுகின்றன, கொஞ்சம் கூர்ந்து கவனித்தால் அந்தச் சிறு பொறிகள் தெரியும், அந்தச் சிறு பொறிகளிலே பெருந் தீ முடங்கிக் கிடப்பதும் தெரியும், அது மட்டுமா தெரியும், எத்தனையோ தலைமுறை தலை முறையாக அவர்கள் உள்ளத்திலே அடங்கிக் கிடக்கும் ஆத்திரம் ஆவேசம் பசிக்கொடுமை அவ்வளவும் தெரியும் அந்த நீர்த் துளிகளில்! அவர்கள் சிந்தும் கண்ணீர் வெறும் கண்ணீர் அல்ல, கூர்வாள் ஒன்றை உருவாக்குவதற்கான மூலப் பொருள்களின் பாசறை! நினைவிருக்கட்டும், அந்தக் கண்ணீரே கூர்வாள் ஆக மாறிய கதை உலக வரலாற்றில் ஏராளம், நேரமிருந்தால் படித்துப் பாருங்கள். ஏன்! அவ்வளவு சிரமம்கூடத் தேவையில்லை, சோவியத் ரஷ்யாவுக்கு உங்கள் தூதுவராகச் சென்று திரும்பி யிருக்கிறார்களே தோழியர் விஜயலட்சுமி பண்டிட் அந்த அம்மையாரைக் கேளுங்கள், அழகான ஆங்கிலத்தில் அருமையாகக் கூறுவார்கள் அந்த "மாஸ்கோ" எந்தக் கண்ணீரிலிருந்து எப்படி உதயமாயிற்று என்ற வீர காதையை!

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ளாக ஆகவில்லை! வேறு விதத்திலே கூறுவதானால், காங்கிரஸ், பயங்கரமான வேகத்தில் பாசிசப் படுகுழி நோக்கிப் பயணம் செய்து கொண்டிருக்கிறதென்பதைக்கண்ணிருந்தும் காண மறுக்கும் கண்ணியவான்களாகவே இருக்கிறார்கள்!

ஆனால் ஒன்று! ரோஹிணி குமார் சௌத்ரிகளின் எண்ணிக்கை நாளாக ஆக குறைந்துகொண்டே வருகிறது, அதே நேரத்தில் மஹேஷ் சந்திர மிஸ்ராக்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே வருகிறது. கண்ணை மூடிக்கொண்டு காங்கிரசையும் காங்கிரஸ் மந்திரி சபைகளையும் போற்றித் துதி பாடிக் கொண்டாடிக் கோவிந்தா போடும் எந்தக் காங்கிரஸ்காரரும் ஒரே நாளில் அந்த கபோதித்தனம் மிகுந்த சௌத்ரி நிலையிலிருந்து எதிர்த்துப் போராடும் மிஸ்ரா நிலைக்கு மாறுவதில்லை. கொஞ்சம் கொஞ்சமாகத்தான் மாற்றம் அடைவார்கள். சிந்திக்க அஞ்சும் சௌத்ரி நிலைக்கும் சிந்தனையை அஞ்சாது பரப்பும் மிஸ்ரா நிலைக்கும் இடையே பல கட்டங்கள் உண்டு, நாம் கட்டுரையின் துவக்கத்தில் கூறியதுபோல சங்கர் ராவ்தேவ்—ஜ்வாலா பிரசாத்—டாக்டர் சுப்பாராவ்—கே. பி. திருப்பதி முதலிய பல கட்டங்கள்! சங்கர் ராவ் தேவ் ஒரு ரோஹிணி குமார் சௌத்ரியாக இல்லை. காங்கிரசின் குறைபாடுகளை இடித்துக் காட்டத்தான் செய்கிறார், ஆனால் மிஸ்ராவைப்போல அவ்வளவு துணிச்சலாக அல்ல! சௌத்ரி அல்லர் அவர், அதே சமயத்தில் மிஸ்ராவும் அல்லர். சௌத்ரியின் மந்தமதி அவருக்குக் கிடையாது மிஸ்ராவின் முடுக்கான போக்கும் அவருக்கில்லை—இரண்டுக்கும் இடைப்பட்ட நிலை அவருடையது. சௌத்ரியின் மனநிலையை ஒரு ரயில்வே ஸ்டேஷனாகவும் மிஸ்ராவின் மனநிலையை மற்றொரு ரயில்வே ஸ்டேஷனாகவும் கொண்டால் சங்கர் ராவ் தேவ், ஜ்வாலா பிரசாத், டாக்டர் சுப்பாராவ், கே. பி. திருப்பதி போன்றாரின் மனநிலையை இடைப்பட்ட பல ஸ்டேஷன்களாகக் கொள்ளலாம். பல காங்கிரஸ்காரர்கள் முந்தா நாள் சௌத்ரிகளாக இருந்தவர்கள் இன்று மிஸ்ராக்களாக மாறியிருக்கிறார்கள்; சிலர் மாறிக்கொண்டிருக்கிறார்கள், ஒரு சிலர் சௌத்ரி நிலையிலிருந்து ஜ்வாலா பிரசாத் கே. பி. திருப்பதி போன்ற நிலைக்கு மாறியிருக்கிறார்கள். நாளை மறுநாள் அல்லது சில பல நாள் கழித்து அவர்கள் மிஸ்ராக்களாக மாறுவார்கள், பிறகு சிவஞான கிராமணிகளாகவோ ஜெயப் பிரகாஷ் நாராயண்களாகவோ ஆனாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை!

சௌத்ரியிலிருந்து மிஸ்ரா!—ஒரு பயணம்! பெரும்பாலான காங்கிரஸ்காரர்கள் இன்று அந்தப் பயணத்திலேதான் ஈடுபட்டிருக்கிறார்கள் — அன்பர் அவினாசியாரைப்போன்ற ஒரு சிலரைத் தவிர! அந்த ஒரு சிலர் சிந்தனை என்றோர் பொருளுண்டு என்பதையே அறியாதவர்கள், நம் பரிதாபத்திற்குரிய மிக நல்லவர்கள்!

* * * *

பயணம் நடந்துகொண்டிருக்கிறது வேகவேகமாக! பல தேசீயத் தோழர்கள் காங்கிரசின் பாசிசம் தீங்கானது என்பதை விரைவாக—நாம் எதிர்பார்த்ததைவிட மிக விரைவாக உணரத் தலைப்பட்டு விட்டனர். மிஸ்ராக்கள் ஆயிரமாயிரம் காங்கிரசில் தோன்றிய வண்ணம் உள்ளனர். பலர் சௌத்ரி ஸ்டேஷனிலிருந்து சிந்தனை ரயிலேறி மிஸ்ரா நிலையம் சேர்ந்தவண்ணம் இருக்கின்றனர்—பயணம் ஜரூராக நடந்துகொண்டிருக்கிறது!

இந்தப் பயணத்தை நிறுத்த எண்ணுகின்றனர் "நேரு–படேல்" கோஷ்டியினர் அது நடவாத காரியம் என்பதைச் சிறிதும் அறியாமல்!

மந்திரிகளைக் கண்டிக்கும் திருத்தத் தீர்மானம் காங்கிரஸ் கமிட்டியில் நிறைவேறியபோது பண்டித நேருவும் சர்தார் படேலும் அங்கு இல்லையாம், கண்காட்சியினைக் கண்டு களிக்கச் சென்றிருந்தனராம், பிறகு இதுபோன்ற தீர்மானம் ஒன்று நிறைவேறியது என்பதைக் கேட்டதும் அனல் கக்கினராம், பிடி சாபம் என்று கூவினராம், "கூட்டு மறுபடியும் அக் கூட்டத்தை" என்று ஆணை இட்டனராம், கடைசியில் இந்தத் திருத்தத் தீர்மானம் வாபீசானால் ஒழிய நாங்கள் இனி மந்திரிகளாக இருக்கமுடியாது என்ன மிரட்டல் பாணம் வீசினராம், சரி என்று உறுப்பினர்களும் படேல்—நேரு—இருவர்தம் உள்ளக் கருத்துக்கிசைய திருத்தத்தைத் தோற்கடித்து விட்டனராம்! சர்தார் படேலிடமும் பண்டித நேருவிடமும் காங்கிரஸ்காரர்கட்கு இருக்

(9-ம் பக்கம் பார்க்க)

* பிரெஞ்சுப் புரட்சி நினைவிருக்கட்டும் என்று உரிமைக் குரலை ஒடுக்கும் ஆளவந்தார்களுக்கு வரலாற்றுச் சுவடியை எடுத்துக்காட்டி அறிவுரை கூறும் அரிய நூல்!

* இன்று தமிழகத்தில் மூண்டுள்ள போராட்டம் மொழிப் போர் மட்டுமல்ல, கலாசாரப் போர் என்பதை நன்கு விளக்கும் சிறந்த நூல்!

அறப்போர்

அறிஞர் அண்ணாதுரையின் புதிய எழுத்தோவியம்!

திராவிட மக்களுக்கான அரிய போர்க் கருவி!

விரைவில் வெளிவரும்! அச்சில் உள்ளது!

திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் :: திருச்சி.

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)